# கழுகின் சத்தம்

அக்டோபர் 28, 2023

1



**காரணம் கலிபோர்னியாவில் ஒரு கரமே இல்லாதிருந்த ஒரு மனிதனை நான் அறிவேன், (நீங்கள் எல்லோருமே செய்தித்தாளில் வெளியான அதை வைத்திருக்கிறீர்கள்), அந்த மனிதனுக்காக ஜெபம் ஏறெடுக்கப்பட்டது, இந்தக் கரம் இங்கே மேலே இல்லாதிருந்தது, அது கீழே வளர்ந்து விரல்கள் அதிலிருந்து இப்பொழுது வளரும் வரை, அதாவது மேலிருந்து முழங்கை வரை, மணிக்கட்டு வரை, பின்னர் உள்ளங்கை வரை, அதனுடைய விரல்களின் பின்னால் உள்ள கை முட்டிகளின் பாகங்கள் வரை வளர்ந்தது என்பதை நீங்கள் அறிவீர்கள்.**



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: எபிரெயர் நிருபத்தின் பேரிலான கேள்விகளும் பதில்களும், பாகம் – 2

---

333. (தேவனால் அந்த ஸ்திரீக்கு சுகத்தை திரும்பளிக்க முடியுமா என்று ஒரு மனிதன் கேட்கிறார்-ஆசி.] நல்லது, சகோதரனே, நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், இது கூடாதது அல்ல. அதுஅதுவல்ல. அது-அது கூடும், நிகழ்க் கூடியதாகவே உள்ளது. காரணம் கலிபோர்னியாவில் ஒரு கரமே இல்லாதிருந்த ஒரு மனிதனை நான் அறிவேன், (நீங்கள் எல்லோருமே செய்தித்தாளில் வெளியான அதை வைத்திருக்கிறீர்கள்), அந்த மனிதனுக்காக ஜெபம் ஏறெடுக்கப்பட்டது, இந்தக் கரம் இங்கே மேலே இல்லாதிருந்தது, அது கீழே வளர்ந்து விரல்கள் அதிலிருந்து இப்பொழுது வளரும் வரை, அதாவது மேலிருந்து

முழங்கை வரை, மணிக்கட்டு வரை, பின்னர் உள்ளங்கை வரை, அதனுடைய விரல்களின் பின்னால் உள்ள கை முட்டிகளின் பாகங்கள் வரை வளர்ந்தது என்பதை நீங்கள் அறிவீர்கள். அது ஒவ்வொரு மாதமும் விசுவாச தூதன் என்ற பத்திரிக்கையில் வெளி வந்தது என்று நான் நினைக்கிறேன். அந்த மனிதன் இந்த விதமாக தன்னுடைய கரத்தைப் பெற்றுக் கொண்டபோது, அவருடைய கரம் எங்கேயிருந்து இல்லாதிருந்தது என்றும், அது எங்கிருந்து வளர்ந்து வந்தது என்றும் அந்தப் பத்திரிக்கையில் காட்டப்பட்டது. ஏறக்குறைய ஒரு வருடகாலமாக அது எப்படி ஒவ்வொரு மாதமும் வளர்ந்து வந்தது என்றும் அதில் காட்டப்பட்டிருந்தது.

334. [முன்பு பேசின மனிதனே மீண்டும் சபையிலிருந்து பேசுகிறார் - ஆசி.) நிச்சயமாக, அது உண்மை. நான்

நினைக்கிறேன். அது – அது - அது ஒரு அபூர்வமான காரியம், பாருங்கள், அது ஒரு மிக அபூர்வமான காரியம். ஒரே ஒரு முறை தான் நான் அதைக் குறித்து கேள்விப்பட்டிருக்கிறேன். இப்பொழுது, சகோதரன் பாஸ்வர்த், அவர் ஒரு இரவு ஒரு ஸ்திரீக்காக ஜெபித்தார். நான் என்னுடைய கூட்டத்தில் ஒருவரை உடையவனாயிருந்தேன். ஆனால் பாஸ்வர்த்தினுடையதோ உடனடியாக நிகழ்ந்தேறியது; ஆனால் என்னுடையது நிறைவேற சிலகாலம் தேவைப்பட்டது.

335. அவர் ஒரு ஸ்திரீக்காக ஜெபித்தார். இப்பொழுது, நான் அந்த ஸ்திரீயினுடைய சாட்சியை வாசித்தேன். அவளுக்கு புற்று நோயிருந்தது, அது அவளுடைய மூக்கை தின்று விட்டபடியால் அவளுக்கு மூக்கேயில்லாதிருந்தது. ஜெபித்த அடுத்த நாள் காலையில் அவளுக்கு மூக்கு

உண்டாயிருந்தது. இப்பொழுது, நான் இதை அறிவேன். அது சகோதரன் பாஸ்வர்த்தினுடையது, அது கிறிஸ்துவே சுகமளிப்பவர் என்று பெயரிடப்பட்டுள்ள அவருடைய புத்தகத்தில் உள்ளது என்று நான் நினைக்கிறேன் அல்லது சந்தோஷத்தை கொண்டு வருபவர் என்ற ஒரு புத்தகத்தில் இருக்கலாம். இப்பொழுது, அதில் அந்த ஸ்திரீயினுடைய சாட்சி, அவளுடைய பெயர் மற்றும் முகவரியோடு உள்ளது. அது சம்பவித்ததை நிரூபிக்கும்படியாக அவள் அயலகத்தார்கள், மருத்துவர்கள் மற்றுமுள்ள ஒவ்வொரு காரியத்தையும் உடையவளாயிருக்கிறாள்.

336. இப்பொழுது, நான் ஒரு இரவு ஒரு அறையில் ஆர்கன்ஸாஸில் உள்ள லிட்டில் ராக்கில் அங்கே.. ஜெபித்திருந்தேன்... லிட்டில் ராக்கில் அல்ல, ஆனால் ஜோனஸ்பரோவில். அதாவது நான்

ஜெபிப்பேன். நான், "கடைசி நபருக்காக நான் ஜெபிக்கும் வரை நான் தரித்திருக்கப் போகிறேன்" என்றேன். அப்பொழுது நான் எட்டு இராப்பகல் மேடையிலேயே இருந்தேன், பார்த்தீர்களா? அப்பொழுது, அந்த அறைக்குப் பக்கத்தில் ஒரு ஸ்திரீ வந்தாள், அவள் இந்த விதமாக தன்னுடைய கைக்குட்டையை வைத்திருந்தாள், அப்பொழுது அவள் அழுது கொண்டிருந்தாள் என்று நான் எண்ணினேன். அப்பொழுது நான் கூறினேன். ஓ, அது காலை இரண்டு அல்லது மூன்று மணியாயிருந்தது என்று நான் யூகிக்கிறேன், நான், "சகோதரியே அழாதீர்கள், தேவன் சுகமளிப்பவராயிருக்கிறார்" என்றேன்.

337. அப்பொழுது அவள், "சகோதரன் பிரான்ஹாம், நான் அழுது கொண்டிருக்கவில்லை" என்றாள். பின்னர் அவள் கைக் குட்டையை எடுத்த போது,

பாருங்கள், அவளுக்கு மூக்கே இல்லாதிருந்தது. மருத்துவர்கள் இவ்வாறு கூறியிருந்தனர். புற்று நோயானது அவளுக்குள்ளாக இருந்த வெள்ளை எலும்பையே தின்று விட்டிருந்தது. அவர்கள் அதை காண்பித்துக் கொண்டிருந்தனர். நான் அவளுக்காக ஜெபித்து, கர்த்தர் அவளைக் குணப்படுத்தும்படி வேண்டிக்கொண்டேன்.

338. அப்பொழுதிலிருந்து ஏறக்குறைய நான்கு அல்லது ஐந்து வாரங்கள் நான் டெக்ஸார்கானாவில் இருந்தேன், அப்பொழுது அங்கே அருமையாக ஆடையணிந்திருந்த ஒரு பெருந்தன்மையானவர் உட்கார்ந்து கொண்டிருந்தார். அவர், "சகோதரன் பிரான்ஹாம், நான் ஒரு காரியம் சொல்ல முடியுமா?" என்று கேட்டார்.

339. அவர் மேடையண்டை எழும்பி வந்தவுடனே, வாயிற்காப்போன்களில் ஒருவர் அவரை அமைதியாயிருக்கும்படிச் செய்ய முயன்றார். அப்பொழுது நானோ, "பரவாயில்லை, நாம் என்னவென்று பார்ப்போம்" என்றேன்.

340. அப்பொழுது அவர், "உங்களால் இந்த வாலிபப் பெண்மணியை அடையாளங்கண்டு கொள்ள முடிகிறதா?" என்று கேட்டார்.

341. அதற்கு நான், "இல்லை, எனக்கு அடையாளங்கொள்ள முடியவில்லை" என்றேன்.

342. அவர், "நீங்கள் இந்த புகைப்படத்தை பார்த்திருந்தால், நீங்கள் அவளை அடையாளங் கண்டு கொண்டிருப்பீர்கள்" என்றார். அவர் டெக்ஸர்கானாவில் சுத்தம் செய்வதற்கு

சர்வ நாசம் செய்கிறவராயிருந்தார், அது ஒரு புத்தம் புதிய வளர்ந்த, மற்றவர்களுக்கு இருப்பது போன்றே வடிவங்கொண்ட மூக்குடன் இருந்த அவனுடைய தாயாயிருந்தது.

343. இப்பொழுது தேவனையே. அது காண்பிக்கப் போகிறது, அது சிருஷ்டிக்கப்பட்டதை நான் கண்டிருக்கிறேன்.



**மாம்சம் திரும்பவும் வளர்ந்திருந்தது. மேலும் அவள் ஒரு சுகமாக்கப்பட்ட மூக்கை மாத்திரம் கொண்டிருக்கவில்லை, ஆனால் அந்த ஒன்று தின்னப்பட்டிருந்த இடத்திற்கு வெளியே வேறொரு மூக்கு வளர்ந்திருந்தது.**



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 51-04-15E வேளை வந்தது

---

17. சிறிது காலத்திற்கு முன்னால் ஒரு பெண்மணி வந்தாள், அவளுடைய பையன் டெக்ஸார்கானாவில் ஒரு முடிவெடுக்கும் ஒருவராக இருக்கிறான். நான் உள்ளே இருந்தேன், அது நாங்கள் கூட்டங்களைக் கொண்டிருந்த டெல்லாஸ் என்று நான் நம்புகிறேன். அவள் வரிசையினூடாக வந்தாள், அவள் தன்னுடைய கைக்குட்டையை இதைப்போல் மேலே கொண்டிருந்தாள். மேலும் அவள் என்னுடைய மேற்சட்டையை பற்றிப்பிடித்துக் கொள்வதற்காக முயற்சித்துக் கொண்டிருந்தாள். அது ஒரு... நாங்கள் அந்த வேகமான (ஜெப) வரிசையில், நாங்கள் கொண்டிருப்பதற்கு பயன்படுத்தியதை நாங்கள் கொண்டிருந்தோம். அவள் என்னுடைய

மேற்சட்டையை பற்றிப் பிடித்துக் கொண்டிருந்தாள். மேலும் அவள்.....'

18. அவள் அழுது கொண்டிருந்ததை நான் நினைத்தேன். நான் அவளுடைய கரத்தை பற்றிப் பிடித்தேன். மேலும் அங்கே ஒரு பெரிய புற்று நோய் மோதவும் கேட்கவும் தொடங்கினது, "திர்ர்ர், திர்ர்ர்" என்று ஒரு வினோதமான வகையில் அது சத்தம் உண்டாக்குகிறது. (சகோதரன் பிரான்ஹாம் விளக்குகிறார் - ஆசிரியர்). மேலும் நான் அவளுடைய கரத்தைப் பிடித்தேன். நான், "சகோதரியே, நீங்கள் புற்றுநோயைப் பெற்றுள்ளீர்கள் என்று நீங்கள் அறிவீர்களா?" என்றேன்.

19. அவள் தன்னுடைய கைக்குட்டையைக் கீழே போட்டாள், அவளுடைய மூக்கு தின்னப்பட்டிருந்தது. மேலும் அவள், "ஆம், ஐயா. நான் நீண்ட

காலமாக டென்னஸியிலுள்ள மெம்பிஸில் மருத்துவம் செய்து கொண்டிருக்கிறேன்” என்றாள், "நீண்ட காலமாக என்னுடைய மருத்துவர் என்னைக் கைவிட்டுவிட்டார்” என்றாள், சுமார் முப்பத்தெட்டு நாற்பது வயதுள்ள ஒரு வாலிப பெண்மணி, அப்படியே சிறிதுகூட வயதுடையவளாக இருக்கலாம். நான், "நல்லது, அது.... நீங்கள் விசுவாசிக்கிறீர்களா?” என்றேன்.

20. அவள், "சங்கை பிரான்ஹாம் அவர்களே.....” என்றாள். அவள் தாமே ஒரு மேய்ப்பராக இருந்தாள். மேலும் அவள், “நான் கொண்டிருக்கிறேன்... நான் உங்களுடைய கூட்டங்களைக் குறித்து கேள்விப்பட்ட முதற்கொண்டே” என்றாள், அவள், “நான் சுகமடையும்படி நீங்கள் எனக்காக தேவனிடம் வேண்டிக் கொள்ளுபடி நான் விரும்புகிறேன் என்பதை நீங்கள் அறியும்படிக்கு உங்களுடைய கவனத்தை

அப்படியே நான் கவரும்படிக்கு முடியுமானால், நான் சுகமடைவேன் என்று நான் எப்பொழுதும் கூறினேன்” என்றாள்.

21. நான், “உங்களுடைய இருதயம் ஆசீர்வதிக்கப்படுவதாக, சகோதரியே. தேவன் நிச்சயமாக அதற்காக உங்களுக்கு பலனளிப்பார் (reward)” என்றேன்.

22. இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்குப் பிறகு, ஒரு இரவு இங்கே கட்டிடத்தினூடாக ஒரு வாலிப மனிதர் ஓடிக்கொண்டே வந்தார். அவர், "சகோதரன் பிரான்ஹாம்..." என்றார். அவர் தன்னுடைய கையில் பற்றிக்கொண்டிருந்த இந்தப் பெண்மணியை நான் அறிந்துள்ளேனா, என்று என்னிடம் கேட்டார். நானோ, "இல்லை. எனக்குத் தெரியும் என்று நான் நம்பவில்லை” என்றேன்.

23. அது அவனுடைய வாலிப தாயாக இருந்தாள். அவள் சுகமாக்கப்பட்டது மாத்திரமல்ல, அவள் தன்னுடைய ஒரு மூக்கையும் கொண்டிருந்தாள். எனவே அவள், "அது ஆரம்பித்த போது, அப்படியே...?... அந்தக் கடைசியான இரவில் அவள் துன்பப்படுவது நின்றுவிடும்" என்றாள். ஒரு காலையில் அவள் படுக்கையிலிருந்து எழுந்து கண்ணாடியில் பார்த்த போது (அவள் அதன் மீது ஒரு துணியைக் கொண்டிருந்தாள்)... ஏன், அவளுடைய பிள்ளைகள் உணர்ச்சி வசப்பட்டனர் மற்றும் ஒவ்வொன்றும். மாம்சம் திரும்பவும் வளர்ந்திருந்தது. மேலும் அவள் ஒரு சுகமாக்கப்பட்ட மூக்கை மாத்திரம் கொண்டிருக்கவில்லை, ஆனால் அந்த ஒன்று தின்னப்பட்டிருந்த இடத்திற்கு வெளியே வேறொரு மூக்கு வளர்ந்திருந்தது.

24. அவள் தன்னுடைய மருத்துவரிடத்தில் சாட்சி கூறுவதற்காகச் சென்றாள். இப்பொழுது, இதைக் கவனியுங்கள். அவள் சாட்சி கூறும்படி சென்றாள், "என்னை உங்களுக்கு நினைவிருக்கிறதா?" என்றாள். "ஆம், ஆனால் என்ன நடந்தது?" என்றார். "நல்லது, நான் மருத்துவரை மாற்றி விட்டேன்" என்றாள் மேலும் அவள்.... அவர், "நல்லது, இப்பொழுது உன்னுடைய மருத்துவர் யார்?" என்றார். "நான் மருத்துவர் இயேசுவிடம் மருத்துவம் செய்கிறேன்" என்றாள். மேலும் கூறினாள்.... மருத்துவர் இப்பொழுது அவளிடம் கேட்டது என்ன என்பது உங்களுக்குத் தெரியுமா? இதைக்குறித்து சிந்தியுங்கள். அவர், "நான் எப்பொழுதாவது அவரைக் குறித்து கேள்விபட்டிருக்கிறேன் என்று நான் நம்பவில்லை . அவர் எங்கே மருத்துவம் செய்கிறார்?" என்றார். நீங்கள்....

“அவர் எங்கே மருத்துவம் செய்கிறார்?” அவள், "மகிமையில்” என்றாள். அது - அது சரியே.

25. இப்பொழுது, அன்பான நண்பர்களே, அந்தக் காரியங்கள் உண்டாக்கிக் கூறப்படுவதில்லை. அவளுடைய பெயரையும் முகவரியும் நான் உங்களுக்கு கொடுப்பேன். நீங்கள் அவளுக்கு எழுதி நீங்களே அவளைக் காணமுடியும். மேலும் ஒ, ஆயிரக்கணக்கான காரியங்கள்.

26. இப்பொழுது, ஒரே ஒரு வியாதியஸ்தர் சுகமாக்கப்பட்டதாக நிச்சயமாகவே நிரூபிக்க முடியுமானால், தேவன் ஒரு சுகமளிப்பவர் என்பதை அது நிரூபிக்கும். அது சரியா? இங்கிருக்கும் எத்தனை பேர் தெய்வீக சுகமளித்தல் மூலம் சுகமாக்கப்பட்டுள்ளீர்கள், உங்கள் கரங்களை நாங்கள் காணட்டும். சற்று

பாருங்கள். இப்படிப்படிப்பட்ட ஒரு மகத்தான திரளான சாட்சிகளால் நாம் சூழப்பட்டிருப்பதைப் பாருங்கள், இப்பொழுது இன்றிவு நம்முடைய முழு இருதயத்துடனும் அவரை விசுவாசிப்போம்.

27. இன்றிரவு நான் உங்களிடம் விரும்புவது என்னவென்றால், அவரை உங்கள் சுகமளிப்பவராக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பது தான்.



**இப்பொழுது, அவள் அந்தக் கைக்குட்டையை அப்படியே வெளியே எறிந்து... என்று கூறியிருந்தால் என்னவாகியிருக்கும். நல்லது, அங்கே தான் ஆசீர்வாதங்களை நாம் தவற விட்டு விடுகிறோம். நாம் அப்படியே சிறிது தேவன் பேரில் காத்திருக்க பயப்படுகிறோம். பாருங்கள், பாருங்கள்?**



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 51-04-15E வேளை வந்தது

1. சமீபத்தில் ஒரு முடமான பாதத்தைக் கொண்டிருந்த அவளுடைய சிறு குழந்தைக்காக அவள் அந்தக் கைக்குட்டைகளில் ஒன்றை அவளுடைய சகோதரியிடம் அனுப்பியிருந்தாள். மேலும் அந்தப் பெண்ணிடம் அவள் கூறினாள்; அவள், "அந்தக் கைக்குட்டையை அதனுடைய பாதத்தின் மீது நீ கட்டு, கர்த்தர் அதை குணமாக்கப்போகிறார்" என்றாள்.

2. எனவே அவள் ஏறக்குறைய இரண்டு வாரங்கள் அந்தக் கைக்குட்டையை கட்டியிந்தாள், அது மிகவும் அழுக்கானதாள். மேலும் அவள், "அதை நீ துவைத்து, பிறகு அதன் மீது திரும்பவும் கட்டு" என்றாள்.

3. எனவே அதை அவள் செய்தாள், அந்த கைக்குட்டையானது ஒரு வகையாக பழசாகி கிழிந்து போனது. குழந்தையின் பாதத்தில் வித்தியாசம் காணப்படவில்லை. அவள், "நான் அதை வெளியே எடுக்கலாமா என்று ஊகிக்கிறேன்" என்று கூறினாள்.

4. மேலும் அவள், "ஓ, நீ அதைச் செய்யாதே" என்று கூறினாள். "அது துண்டுகளாக ஆகுமானால், நீ கயிறுகளால் அதைக் கட்டி, பிறகு திரும்பவும் அங்கே அதன் மீது கட்டு" என்றாள். அவள், "ஏனெனில் அது சுகமடையும் என்று நான் அறிகிறேன்" என்றாள். அனேக காரியங்கள் கூட்டங்களில் செய்யப்பட்டதை அவள் கண்டிருக்கிறாள்.

5. அந்த ஸ்திரியானவள் அதைச் செய்தாள்-அல்லது, அவள் அப்படியே ஒரு சில கயிறுகளைக் கொண்டு

அந்தக்கைக்குட்டையை அந்தக் குழந்தையின் பாதத்தின் மீது கட்டினான். ஒரு நாள் காலை, அவள் அந்தக் குழந்தைக்கு ஏதாவது சம்பவிக்க வேண்டுமென்று சென்றாள், கர்த்தர் அந்த இரவில் அங்கே இருந்தார். அந்த குழந்தையின் பாதம் (foot) நேரானது.

6. அவள் காட்டும்படி அந்தக் குழந்தையை கூட்டத்திற்கு கொண்டு வந்திருந்தாள், கைக்குட்டையில் விடப்பட்டிருந்த கயிறுகளைக் கொண்டு வந்திருந்தாள், அதன் தற்போதைய படத்தையும் (சுகமடைவதற்கு முன்புள்ள குழந்தையின் படத்தையும் கொண்டிருந்தாள், அந்த சிறு குழந்தையின் கால் அதைப் போன்று எப்படியாக முடமாகி இருந்தது, சுமார் எட்டு அல்லது பத்து மாதங்கள் வயதுடைய சிறு குழந்தை, அங்கே சிறு

குழந்தையின் கால் அப்படியே மற்ற எந்த குழந்தையைப் போலவும் இயல்பாக இருக்கிறது.

7. இப்பொழுது, அவள் அந்தக் கைக்குட்டையை அப்படியே வெளியே எறிந்து... என்று கூறியிருந்தால் என்னவாகியிருக்கும். நல்லது, அங்கே தான் ஆசீர்வாதங்களை நாம் தவற விட்டு விடுகிறோம். நாம் அப்படியே சிறிது தேவன் பேரில் காத்திருக்க பயப்படுகிறோம். பாருங்கள், பாருங்கள்? "காத்திருக்க மாத்திரம் செய். நான் மீண்டும் அந்த மெல்லிய சத்தத்தைக் கேட்கிறேன். காத்திருக்க மாத்திரம் செய். அதற்கு அதிக காலமில்லை. இப்பொழுது கூட பிதாவின் கரம் பரிந்து பேசிக் கொண்டுதானிருக்கிறது. சீக்கிரத்தில் நாம் வெற்றியின் பாடலை இயேசுவுடன் பாடிடுவோம்" என்பதை நீங்கள்

கேட்டிருக்கிறீர்கள். அது சரியே. அப்படியே தேவன் பேரில் காத்திருங்கள். அதை விசுவாசித்து, அதை அறிக்கை பண்ணி, அதனுடன் தரித்திருங்கள்; தேவன் அதை உங்களுக்காக சம்பவிக்கப் பண்ணுவார்.



# அந்தக் குழந்தையின் தலை சுமார் பதினெட்டு அல்லது இருபது மணி நேரத்திற்குள் சுருங்கினது.



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 55-06-11 உன் கையிலிருக்கிறது என்ன?

---

10. மக்களில் அநேகம் பேர் சாட்சி கொடுத்துக் கொண்டிருக்கின்றனர் என்று அவர்கள் கூறுகின்றனர். எல்லாவிதமான வியாதிகளும் மற்றும் சுகமாக்கப்பட்ட எல்லாவற்றையுங்குறித்து மக்கள் சாட்சிக் கொடுப்பதை இன்று சகோதரன் உட் மற்றும் அவர்களும் என்னிடமாகக் கூறினார்கள். கட்டிலின் மேல் கிடத்தப்பட்ட அநேகர் ...... இன்றிரவு ஒரு கட்டில் கூட இருக்குமா என்று நான் வியக்கின்றேன். கட்டிலில் கிடத்தப்பட்டவர்களையும் மற்றவற்றையும் தேவன் முற்றிலுமாக சுகப்படுத்தி கட்டில்களை அப்புறப்படுத்தி விட்டார். அது அற்புதமானதல்லவா?

11. கூறப்போவோமானால், கடந்த மாலை வேளையில், பிரசங்க மேடையின்

மேல் வந்து கொண்டிருந்தவர்களின் முதலாவதாக வந்தவரின் காரியமானது மிகவும் மோசமான, பரிதாபத்திற்குரிய நிலையிலிருந்தது என்று கூறுகின்றேன். கடந்த சில இரவுகளாக ஒரு பெண், தலை மிகப்பெரிதாக வீங்கின நிலையில் இருக்கும் “வாட்டர் ஹெட்” என்னும் வியாதியினால் பீடிக்கப்பட்டிருந்த (Water head) தன்னுடைய குழந்தையுடன் உட்கார்ந்திருந்ததை நான் கவனித்தேன். மருத்துவ ஆராய்ச்சியின்படியோ, விஞ்ஞான ஆராய்ச்சியின்படியோ அந்த குழந்தைக்கு ஒன்றுமே செய்துஉதவ முடியாதிருந்தது. அக்குழந்தைகளால் முற்றிலுமாக ஒன்றுமே செய்ய முடியாது. அந்த ஏழைத்தாய் மிக ஆர்வமுடையவளாக ஒவ்வொரு இரவும் அந்த சிறு பையனை துணியால் சுற்றி எடுத்துக்கொண்டு வந்தாள். அது அழுதுக்கொண்டே இருந்தது. நான் அந்த சிறு குழந்தையை நோக்கிப் பார்த்துக் கொண்டிருந்தேன், பிரச்சனை என்ன

என்பதை என்னால் காணமுடிந்தது. தரிசனங்கள் அநேக தடவைகள் பேசுகின்றன; நான் அவைகளைக் குறித்து ஒன்றும் பேசுவது கூட கிடையாது.

12. சற்று முன்னர் ஒரு நபர் என்னை தொலைபேசியில் அழைத்தார், முன்னொரு இரவு அந்த நபரை நான் உணவு விடுதியில் சந்தித்தேன். அப்பொழுது கர்த்தர் அவரிடம் இருந்த தவறு என்ன என்று என்னிடம் கூறினார். அந்த நபர் என்னை தொலைபேசியில் அழைத்து "உங்களுக்குத் தெரியுமா? நீங்கள் என்னை ..... நான் உங்களைக் கண்டது முதல் என் உடல் நலம் அதிகமாக மேம்பட்டது" என்றார். அவரிடம் இருந்த தவறு என்ன என்று ஏற்கெனவே நான் அவருக்குக் கூறியிருந்தேன்; அவருக்கு ஏறக்குறைய மயக்கம் வந்துவிட்டது. உங்களுக்குத் தெரியுமா ..... அப்பொழுது அவர் .... அது தான். நீங்கள் கவனிக்க மாத்திரம் செய்யுங்கள்; அது எப்படியாயினும் நடக்கப் போவதை நீங்கள்

காண்பீர்கள். ஆகவே, அதைக் குறித்து அவர்களுக்குத் தெரியுமா என்பதில் முக்கியத்துவம் எதுவுமில்லை, அது சரியாகி விடும் என்று தேவன் கூறியுள்ளார் என்பதை நீங்கள் அறிந்தவர்களாக இருப்பது தான் காரியம் ஆகும். ஆகவே, நீங்கள் பாருங்கள், அது - அது காரியத்தை முற்றுப் பெறச் செய்யும். மக்கள் அதை அறிந்துக் கொள்ள வேண்டும் என்று நாங்கள் விரும்புகின்றோம் என்பது காரியம் அல்ல. தேவன் அதைக் கூறியுள்ள போது, சரி, ஆமென், அதை அப்படியே விட்டு விடுங்கள்; ஒரு சிறு ஊக்குவித்தலானது அவர்களுக்கு உதவியாக இருக்குமென்று நீங்கள் நினைப்பீர்களானால் அப்பொழுது நீங்கள் சிலகாரியங்களைக் கூறுவீர்கள்.

13. ஆனால் இந்த சிறு குழந்தை பிரசங்க மேடைக்கு வந்தது, அதனுடைய தலை மிகப் பெரியதாக வீங்கியிருந்தது, அது மிகவும் களைப்புற்றிருந்த தன்னுடைய சிறிய ஏழைத்தாயின் மீது சாய்ந்துக்

கொண்டிருந்தது. நான் என் கரங்களை அந்த குழந்தையின் மீது வைத்த போது, அந்த ஒளியானது அந்தக் குழந்தையின் தலையின் மேலே சுழன்றதை நான் கண்டேன், ஏதோ ஒன்று சம்பவிக்கப்போகின்றது என்று நான் அறிந்துக் கொண்டேன். ஆகவே, நான் அந்தத் தாயிடம் குழந்தையை வீட்டிற்குக் கொண்டு செல்வாளா என்று கேட்டேன்; அப்பொழுது அதற்கு ஏதோ ஒன்று சம்பவித்தது என்று நான் அறிந்திருந்தேன். அந்த தாயிற்கு அதை நிரூபிக்க ஏதோ ஒன்று என்னிடம் இருந்திருந்தால் நலமாயிருந்திருக்கும். ஆனால் நான் அவளிடமாகக் கூறினேன், நான், “நீ குழந்தையை எடுத்துக் கொண்டு வீட்டிற்குக் செல் ..." என்று கூறினேன். அவள் நகரத்திற்கு வெளியே இருந்தாள், சுமார் நூறு மைல்களுக்குப்பால் என்று அவளிடம் கூறினேன் என்று நான் நம்புகிறேன்.

14. ஒரு இரவு கூட்டத்திற்குக் குழந்தையைக் கொண்டு வருவதற்காக அவள் சுமார் இருநூறு மைல்கள் பிரயாணம் செய்கின்றாள், அவள் வீடு சென்றாள், நான் அவளிடம், "குழந்தையின் தலையைச் சுற்றி ஒரு கயிறை வைத்து கயிறின் அளவைக் குறித்துக் கொள். பிறகு அந்த அளவின்படி கயிறை வெட்டு; பிறகு அடுத்த இரவு அந்த கயிறை தலையில் சுற்றி வை, நாளை இரவு, பிறகு குழந்தையின் தலை எவ்வளவாக சுருங்கினது என்று கயிற்றில் அளவெடுத்து என்னிடமாக அந்தக் கயிற்றைக் கொண்டு வா" என்று கூறியிருந்தேன். ஆகவே சுமார் பதினெட்டு அல்லது இருபது மணி நேரம் சென்றது. இதோ சுமார் ஒன்றை அங்குலம் அளவு கொண்ட கயிறு, சுமார் பதினெட்டு மணி நேரத்திற்குள் குழந்தையின் தலை சுருங்கினது. குழந்தையுடன் அந்தத் தாய் இன்றிரவு இங்கே இருக்கின்றாளா ... ஒ அவள் ஏற்கெனவே ... இதோ அந்தத் தாய் இங்கே இருக்கின்றாள். அது சரி. அது சரி.

சகோதரியே, தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

15. இப்பொழுது, சகோதரியே, நான் அவ்வாறு செய்ததன் காரணம் என்னவென்றால்; நீங்கள் சிறிது ஊக்குவிக்கப்படுவீர்கள் என்பதற்காகவே. நான் - நான் - நான் பெற்றிராத அநேக காரியங்களுக்காக நான் ஜெபித்துள்ளேன், ஆனால் இன்றிரவு நம்முடைய சிருஷ்டிகருக்கு முன்பாக நான் அவிசுவாசிப்பதில்லை, இன்னும் உத்தமமாகவே நான் கேட்பேன். நான் கேட்கின்றதை அவர் எனக்குக் கொடுக்கும் வரையிலும் அல்லது நான் கேட்கின்ற காரியத்தை அவராலே ஏன் கொடுக்க முடியாது என்று என்னிடமாக அவர் கூறுகின்ற வரையிலும் நான் தேவனிடமாக அந்தவிதமான உத்தமத்துடனே எந்த ஒரு காரியத்தையும் நான் கேட்பேன்.

16. இப்பொழுது ஒன்றரை அங்குல அளவு, அந்த சிறிய ... அந்தக் குழந்தையின் தலை சுமார் பதினெட்டு அல்லது இருபது மணி நேரத்திற்குள் சுருங்கினது. அது உங்களை ஊக்குவிப்பதற்காகவே, பாருங்கள். இப்பொழுது, அப்படியே விசுவாசித்துக் கொண்டேயிருங்கள், பாருங்கள், இப்பொழுது, அது - அது சுமார் எழுபத்திரண்டு மணி நேரங்களுக்கு அப்படியாக சுருங்கிக்கொண்டே இருக்கும். பிறகு நீங்கள் கவனிப்பீர்கள் - நீங்கள் அந்த கயிற்றின் அளவை வெட்டிக் கொண்டேயிருங்கள். அது நின்று போகும். ஒரு வேளை சிறிது நேரத்திற்கு மோசமாகவும் ஆகலாம், என்ன நடந்தாலும் சரி, நீங்கள் விசுவாசித்துக் கொண்டேயிருங்கள், புரிகின்றதா? நீங்கள் உங்கள் விசுவாசத்தைக் கொண்டிருக்கும் வரைக்கும்...

17. இப்பொழுது நினைவில் கொள்ளுங்கள், ஒரு அசுத்த ஆவியானது

ஒரு நபரிலிருந்து வெளியே சென்ற உடன் அது வறண்ட நிலங்களில் நடந்து திரிந்து தன்னை விட இன்னும் மோசமான ஏழு ஆவிகளுடனே திரும்பி வரும், அதனால் முடியுமானால், உள்ளே சென்று முழு கட்டுக்குள் காரியங்களை எடுத்துக் கொள்ளும், அப்பொழுது நிலைமையானது மிகவும் மோசமாக மாறும். ஆனால் அந்த வீட்டின் நல்ல மனிதன் அங்கே இல்லையென்றால், அதை அப்படியே புறம்பேவைக்கின்ற உங்கள் விசுவாசமாகிய அது ..... அதை எதிர்த்துச் சண்டையிட வேண்டாம். அது திரும்பி உங்களிடம் சண்டையிடும். அதை அப்படியே புறம்பே தள்ளுங்கள், அதற்கு கவனம் செலுத்தாமல் அப்படியே விட்டு விடுங்கள். அவ்வளவு தான். அப்படியே தொடர்ந்து முன்னே செல்லுங்கள். அது முடிந்து போன ஒன்று என்று சொல்லுங்கள்; அது நல்லதாக முடியும். உங்கள் குழந்தை முழுவதுமாக

சரியாகிவிடும். இப்பொழுது கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக.



சங்கை திரு பிரன்ஹாம் அவர்கள் அந்த மனிதனுக்காக ஜெபம் செய்த பிறகு சற்றுநேரத்தில், அந்தப் புற்றுநோயானது அதிலிருந்து விழுந்து அவருடைய காலின் மேல் உருண்டது, நாங்கள் அதை கீழேயிருந்து எடுத்தோம், இதோ அது இருக்கிறது.



**சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து**

## செய்தி: **காணக்கூடாததை நோக்கிப் பார்த்தல்,** ஆகஸ்டு 16, 1950

12. அதன்பிறகு அடுத்த மூலையில் (பிரசுரிக்கப்பட்டிருப்பது - மொழிபெயர்ப்பாளர்) யாதெனில், ஒரு புற்றுநோயானது (இது பத்திரிகை நிருபர் தாமே பேசுவதாகும்.) தம்முடைய கழுத்திலே தொங்கிக்கொண்டிருந்த ஒரு ஊழியக்காரரைக் குறித்து அங்கு குறுக்காக காண்பீர்கள், ஏறக்குறைய இரண்டு வருடங்களுக்கு முன்பு சவரம்பண்ணியபோது ஏற்பட்ட வெட்டுக்காயத்தின் நிமித்தமாக, அது ஒரு புற்றுநோயாக ஆகியிருந்தது.

தொடர்ந்து அவர், "அம்மனிதன் மேடைக்கு வந்தபோது, நான் அந்தப் புற்றுநோயைக் கண்டேன். அது புண்ணாகவும் இரத்த சிவப்பாகவும் தோற்றமளித்தது. சங்கை திரு பிரன்ஹாம் அவர்கள் அந்த மனிதனுக்காக ஜெபம் செய்த பிறகு சற்றுநேரத்தில், அந்தப் புற்றுநோயானது அதிலிருந்து விழுந்து

அவருடைய காலின் மேல் உருண்டது, நாங்கள் அதை கீழேயிருந்து எடுத்தோம், இதோ அது இருக்கிறது. அது கீழே விழுந்த இடத்திலே, அவருடைய கழுத்தில் ஒரு ஆழமான உட்குழி உள்ளது" என்றார்.

அந்தப் புற்றுநோயானது கீழே விழுந்த அவருடைய கழுத்திலே ஒரு உட்குழியோடு அந்த மனிதனுடைய புகைப்படம் அங்கே இணைக்கப்பட்டிருந்தது. (அது) ஜோன்ஸ்போரா, ஆர்கன்ஸா(விலுள்ள), "ஆர்கன்ஸா கதிரவன் (Arkansas Sun)" செய்தித்தாள், அதற்கு கடிதம் எழுதி, உங்களுக்கு அது தேவைப்படுமானால், அதைப் பெற்றுக்கொள்ளுங்கள், உங்களுடைய வாக்குமூலம்.



# இனிமேல் பாவம் செய்யாதே



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 48-03-04 தேவதூதன்

இன்றிரவு, நீங்கள் ஆயத்தமாயில்லையெனில் ஆயத்தப்படுங்கள். நீங்கள் ஒரு பாவியாக ஜெப வரிசையில் வருவீர்களானால், உங்களால் முடியாது... நீங்கள், "ஒரு பாவி வர முடியுமா?" என்று கேட்கலாம். ஆம், ஐயா. ஒரு பாவியால் வர முடியும். ஆனால் தேவன் உங்களுடைய சரீரத்தைத் தொடும் போது, நீங்கள் கிறிஸ்துவுக்குள் வராமலிருந்தால், அதைக் காட்டிலும் மோசமான காரியம் உங்களைப் பின்தொடர்ந்து வரும் என்பதை கவனியுங்கள்.

40. இங்கே சில வாரங்களுக்கு முன்பு, ஏதொவொன்றைக் கொண்ட ஒரு ஸ்திரீ ஜெப வரிசையில் வந்தாள்... ஆம்புலன்ஸ் வாகனங்கள் கார் நிறுத்தும் பாதைகளையும் காரியங்களையும் அடைத்து விட்டதைக் குறித்த ஒரு பயங்கரமான கட்டுரையை செய்தித்தாளில் எழுதியிருந்தனர். அந்த சீமாட்டியின் கரத்தைத் தொடுவதற்காக நான் சென்றேன். நான் அவளுடைய கரத்தைத்

தொடுவதற்கு முன்பாக, அவள், “எனக்கு புற்று நோய் உள்ளது” என்றாள்.

நான் அவளுடைய கரத்தைப் பற்றிப் பிடித்து, “சகோதரியே, அது ஒரு புற்று நோயல்ல, உனக்கு அநேக புற்று நோய்கள் உள்ளன” என்றேன். ஆ, அவளுக்கு ஏறத்தாழ பத்து அல்லது பன்னிரண்டு புற்று நோய்கள் இருந்தன. சரீரத்தின் வெவ்வேறான பாகங்களை அவை பாதித்திருந்தன. என்னுடைய கரமானது வேகமாக வீங்கி, துடிப்புகள் அதனூடாகச் சென்றன.

அவள், “எனக்காக ஏதாவது செய்ய முடியுமா?” என்று கேட்டாள்.

நான், “உன்னால் விசுவாசிக்கக் கூடுமானால். ஆனால் நான் அந்த புற்று நோய்களைக் கடிந்து கொள்வேனனானால் அவை மறைந்து போய் விடும், நீ அதை சந்தேகித்தால், அது திரும்பவும் வந்து விடும். நீ கிறிஸ்துவை சேவிக்கவில்லை என்றால் அது திரும்பவும் வந்து விடும்” என்றேன். நான், “நீ ஒரு கிறிஸ்தவளல்ல என்று அறிகிறேன்” என்றேன்.

அவள், “இல்லை, நான் கிறிஸ்தவளல்ல” என்றாள்.

பிறகு அவள் என்னுடைய கண்ணை நோக்கிப் பார்த்தாள்... இதையும் நான் உங்களிடம் சொல்லியாக வேண்டும், ஏனெனில் அநேக ஜனங்கள் அதை ஏற்கனவே அறிந்துள்ளனர். சில சமயங்களில் நான் அவர்களுடைய கண்களை ஈர்த்துக் கொள்ளும் போது, அவ்வாறு தான் நான் அவர்களை அந்த வாய்க்காலில் (channel) கொண்டு வருகிறேன். நீங்கள் கவனிக்கிறீர்களா? மேலும் அப்படியானால், இது மனதிலுள்ளவைகளைப் படிக்கும் கலையல்ல; இது மனோதத்துவம் அல்ல. அது அவ்விதமிருந்தால், பவுல் அவ்வாறு செய்தான், அவன் அந்த மனிதனை உற்றுப் பார்த்து, அவனை நோக்கி, “நீ சுகமாக்கப்படுவதற்கான விசுவாசம் உனக்குள்ளதை நான் அறிகிறேன்” என்றான்.

41. நான் இதை உங்களுக்கு அருளுவேன். அது அவ்விதமான மனோதத்துவமாக உள்ளது. “சைசீ (Psyche)” என்ற வார்த்தைக்கு “சிந்தை (mind)” என்று அர்த்தம். அது கிறிஸ்துவின்

சிந்தையாக உள்ளது. மனிதன் அதற்குள் பிரவேசித்து, கிறிஸ்து வின் சிந்தையை அறியும்படியான சிலாக்கியத்தை உடையவனாய் இருக்கிறான்... அல்லேலூயா. என்னே, கிறிஸ்துவின் வாய்க்காலுக்குள் வாசமாயிருப்பது என்பது என்ன ஒரு யதார்த்தமாயுள்ளது. தகுதியற்ற மனிதர்களாகிய நாம் தேவனுடைய குமாரரும் குமாரத்திகளுமாக உடன் பிரஜைகளாக இருப்பதற்கு கொண்டு வரப்படுகிறோம்... ஓ, என்னே. நான் இதை அடையும் போது, அது என்னை சத்தமிடச் செய்கிறது...

கவனியுங்கள். தூதர்கள் கூட வர முடியாத ஆட்சி எல்லைக்குள்... "தூதர்களா?" என்று கேட்கலாம். ஆம், ஐயா. நாம் குமாரரும் குமாரத்திகளுமாயிருக்கிறோம்; தூதர்கள் பணிவிடைக் காரர்களாய் இருக்கிறார்கள். அது சரியே. குமாரரும் குமாரத்திகளும் போகும் இடத்திற்கு வேலைக்காரர்கள் போக முடியாது. அவர்கள் அந்த ஐக்கியத்திற்குள் வர முடியாது, அவர்கள் பணிவிடைக்காரர்களாய் உள்ளனர், நாமோ குமாரர்களும் குமாரத்திகளுமாய் இருக்கிறோம்.

42. கவனியுங்கள். நான் அந்த ஸ்திரீயை உற்று நோக்கி, அவள் ஒரு புகைப் பிடிப்பவள் என்று அறிந்தேன். நான் அவளிடம் கூறினேன்; “இப்பொழுது, நீ புகைப் பிடிப்பவள்” என்றேன்.

அவள், “ஆம்” என்றாள்.

நான், “நீ அதை விட்டு விடு. உன்னுடைய இருதயத்தை கிறிஸ்துவுக்குக் கொடு” என்றேன்.

அவள், “நான் எந்த சபையில் சேர வேண்டும்?” என்று கேட்டாள்.

நான் அவளிடம், “நான்... அதை நான் சொல்வதற்கில்லை. அதை நீ தேட வேண்டியவளாயிருக்கிறாய். ஆனால் நீ பரிசுத்த ஆவியைப் பெறாமலிருந்தால், பரிசுத்த ஆவியைப் பெற்று, தெய்வீக சுகமளித்தலையும் பரிசுத்த ஆவியையும் குறித்து பிரசங்கித்து அதை விசுவாசிக்கிற ஏதாவது ஒரு முழு சுவிசேஷ சபைக்குப் போ” என்று கூறினேன்.

அவள் சிறிது நேரம் அங்கேயே படுத்துக் கொண்டிருந்தாள். நான், “நீ அதைச் செய்வாயா?” என்றேன்.

அவள் அதைச் செய்வதாக வாக்குப்பண்ணினாள். அவள் வாக்குப் பண்ணி விட்டு, நான் முதல்தடவை அந்த புற்று நோயைக் கடிந்து கொண்ட சிறிது நேரத்திலேயே அந்த துடிப்பு என் கையை விட்டு போய் விட்டது. அவள் சுகத்தைப் பெற்றுக் கொண்டாள்... (ஒலிநாவில் காலியிடம் – ஆசி.)

அவள் சிறிது காலமே உயிர் வாழ்வாள் என்று மருத்துவர்கள் கூறியிருந்தனர். அந்த ஸ்திரீயோ வியாதிப்படுக்கையை விட்டு எழுந்து விட்டாள். அவள் திரும்பிச் சென்று, தன்னுடைய வேலையை செய்தாள்; அவள் தன்னுடைய அண்டை வீட்டாருடைய வேலையையும் செய்தாள், இன்னும் அந்த சிகரெட்டுகளைப் புகைத்துக் கொண்டிருந்தாள். அவள் அங்கத்தினளாயிருந்தாள்... அந்த சபையைச் சேர்ந்தாள்... அதற்கு முன்பாக சபையைச் சார்ந்தவளாய் இருந்தாள்... (ஒலிநாடாவில் காலியிடம் – ஆசி.) அவளுடைய மேய்ப்பர் கூட... அவர் வேதவாக்கியம் சரியானதென்று புரிந்து கொண்டிருந்தால், யாராவது தேவனால் சுகமாக்கப்பட்டிருந்தால், அவர்கள் தங்களுடைய பாவங்களை விட்டு

விட வேண்டும்; அவள் அந்த சிகரெட்டுகளைப் புகைப்பதை விட்டு விட வேண்டுமென்று அவளிடம் கூறினார். மற்றொருவரான சங்கை... பட்டணத்திலுள்ள ஒரு சுவிசேஷ ஊழியக்காரரும் அவளிடம் சென்று அதை செய்ய வேண்டாம் என்று அவளை எச்சரித்தார்.

அவளோ, "நல்லது, என்னால் அதை விட முடியவில்லை" என்றாள்.

"சகோதரன் பிரன்ஹாமிடமும் சர்வவல்லமையுள்ள தேவனிடமும் நீ வாக்குப் பண்ணினது அதுவல்லவே" என்றார்.

அந்த ஊழியக்காரர் அவளை கடைசியாக சந்தித்த பிற்பாடு, ஒரு சில இரவுகளில் அந்த ஸ்திரீ மாரடைப்பால் மரித்துப் போனாள்.

43. பாருங்கள்? ஓ, என்னே. இனிமேல் பாவம் செய்யாதே. இப்பொழுது, நீங்கள் பாவம் செய்தால், உடனடியாக பாவம் செய்தால், உங்களுக்கு நிச்சயமாகவே ஒரு வழக்கறிஞர் உண்டு. ஆனால் நான் கூற விரும்புவது என்னவென்றால், அந்த வழியில் நடக்க வேண்டாம், நீங்கள் பின்பற்றின அதே பாதையைப் பின்தொடருங்கள், ஏனெனில் ஒரு

மோசமான காரியம் வந்து கொண்டிருக்கிறது. தேவனுக்கு முன்பாக என்னுடைய சத்தமானது வியாதியை சுகப்படுத்த பிழையற்றதாக இருக்குமானால், அந்த சத்தம் உங்களை எச்சரிப்பதற்கும் மிக முக்கியமாக உள்ளது என்பதை ஞாபகம் கொள்ளுங்கள். ஏனெனில், ஒரு மோசமான காரியத்தை நீங்கள் எதிர் நோக்குகிறீர் கள்.



**அப்பொழுது அவள், "பிரசங்கியாரே, நீர் சரியாகக் கூறியிருந்தீர் என்றே நான் உமக்குக் கூற விரும்புகிறேன்" என்றாள். மேலும் அவள், "நான் அப்பொழுது கடைசி முறையாக பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தினேன்" என்றுக் கூறினாள்.**



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 62-0121E – ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணம்

245 இப்பொழுது நான் ஜெபித்துக்கொண்டிருக்கையில், நீங்கள் உங்களுடையத் தலைகளை வணங்கியவாறே இருங்கள். உங்களுடையக் கரத்தை உயர்த்தியிக்கிற நீங்கள் ஒவ்வொருவரும், நீங்கள் அதனோடு ஆழ்ந்த உத்தமத்தோடு இருப்பீர்களேயானால், அப்பொழுது நீங்கள் அதை உண்மையாக பொருளுணர்ந்துக் கூறுங்கள். அதாவது நீங்கள் தவறாயிருந்து வருகிறீர்கள் என்பதை ஜனங்கள் அறிந்துகொள்வதனால் நீங்கள் வெட்கமடைகிறதில்லையே! எப்படியாயினும் நீங்கள் அவர்களோடு அங்கே நியாயத்தீர்ப்பிலே நிற்க வேண்டியவர்களாயிருக்கப் போகிறீர்களே. நீங்கள் தவறாயிருக்கிறீர்கள் என்பதை நீங்கள் அறிந்துள்ளீர்கள் என்ற

திடநம்பிக்கையைத் தேவன் உங்கள் மீது போதுமான அளவு வைத்துள்ளாரே.

246 இங்கே அண்மையில் நான் அந்தவிதமான ஒரு காரியத்தைப் பிரசங்கித்துக் கொண்டிருந்தேன். அப்பொழுது நான் அங்கு பின்னால் நின்றுகொண்டிருந்த ஓர் வாலிபப் பெண்மணியினிடத்தில் பேசினேன். ஒரு ஊழியக்காரரின் மகளாயிருந்த அவளோ அசிங்கமாகக் காணப்பட்டாள். அவள் என்னை சபைக்கு வெளியே சந்தித்தாள், அவள் என்னை கடுமையாக வீசியெறிந்து பேசாதிருந்திருந்தால் நலமாயிருந்திருக்குமே! ஆனால் அவளோ, "நீர் அறிவற்றவராயிருக்கிறீரே" என்றாள். சிறு பெண், திமிரான அவமதிப்புப் பண்புடையவளாய், உதட்டுச் சாயமும் பூசிக் கொண்டிருந்தாள்; மேலும் குட்டையாகத் தலைமுடியை வெட்டிக் கொண்டவளாயிருந்தாள். அப்பொழுது அவள், "அதைக் குறித்து என்னிடத்தில் பேச

எனக்கு யாராவது வேண்டுமென்றால், அப்பொழுது நான் கொஞ்சம் அறிவுத்திறனுள்ள யாரையாவது பயன்படுத்துவேன்" என்றாள். அதன்பின்னர் மீண்டும், "அது போன்ற ஒரு காரியத்தைப் பிரசங்கிக்க என்னுடைய தகப்பனாரின் பிரசங்கபீடத்திற்கு நீர் ஒருபோதும் வரவே வேண்டாம்" என்று கூறினாள்.

247 அப்பொழுது நான், "உன்னுடையத் தந்தை, ஒரு நல்ல நேர்மையான பாப்டிஸ்டு பிரசங்கியாராக இருந்தாலும், அவர் அதற்கு எதிராக பிரசங்கிக்கமாட்டார் என்ற எண்ணங்கொண்டே நீ என்னிடத்தில் சொல்லுகிறாயா?" என்று கேட்டேன்.

அதற்கு அவளோ, "அவர் உங்களை இங்கு வரும்படிக்கு கூலிக்கு அமர்த்தவில்லையே..." என்று கூறினாள்.

அப்பொழுது நானோ, "அவர் என்னைக் கூலிக்கு அமர்த்தவில்லைதான். ஆனால்

நானோ அழைப்பின் மூலமே வந்தேன்” என்று கூறினேன்.

அவளோ மறுபடியும், “நான் உம்மை ஒருபோதும் அதற்காக மன்னிக்கவே மாட்டேன்” என்றாள்.

248 அப்பொழுது நான், “அது உன்னைப் பொறுத்ததாயிருக்கிறது. நான் சுவிசேஷத்தை மாத்திரமே பின்பற்றினேன்” என்று கூறினேன். அங்கே வீசின மெல்லிய காற்றில் ரோஜா மலர்களின் புதர் செடிகளோ அசைந்தாடிக் கொண்டிருந்தன. அழகான வாலிபப்பெண்.

249 கொஞ்சங்கழித்து, ஏறக்குறைய ஓர் ஆண்டு கழித்து, நான் அந்தப் பட்டிணத்தினூடாகக் கடந்து சென்றேன். அப்பொழுது நான் அந்த அதே வாலிபப் பெண்மணி தன்னுடைய அரைப்பாவாடையானது கீழே தொங்கிக்கொண்டிருக்க, ஒரு சிகெரேட்டைப் புகைத்துக்கொண்டு வீதியில்

சென்று கொண்டிருப்பதைக் கண்டேன். நான், "அது சகோதரன் *இன்னார்—இன்னாருடைய* மனைவி இல்லை மகளாயிற்றே" என்று யோசித்துப் பார்த்தேன். அப்பொழுது என்னால் அவளண்டை செல்ல முடியுமா என்று பார்க்க நானும் அந்த வீதியில் நடந்து சென்றேன்.

250 அப்பொழுது அவள் என்னை ஏறெடுத்துப் பார்த்துவிட்டு, இந்த சிகெரெட்டை புகைத்து, அதன் புகையை அவளுடைய மூக்கினூடாக ஊதினாள். பின்னர் அவள், "ஹலோ, பிரசங்கியாரே" என்று தேவபக்தியற்ற கொச்சையான வார்த்தைகளைக்கூறி அவ்விதமாய்க் கூப்பிட்டாள்.

அதற்கு நானோ, "இந்த நிலைமையா?" என்றேன்.

உடனே அவள், "என்னுடைய சிகெரேட்டை எடுத்து புகைத்துப்பார்.

ஆண்மை ஆற்றலோடு செயல்படும் ஒருவராயிரும்” என்று கூறினாள்.

அதற்கு நானோ, “நீ உன்னைக் குறித்தே வெட்கப்படவில்லையா?” என்று கேட்டேன்.

251 அப்பொழுது அவளோ தன்னுடைய சட்டைப் பையில் வைத்திருந்த சிகெரெட்டு அட்டைப் பெட்டியை கைவிட்டு எடுத்து, “உனக்கு வேண்டுமானால் ஒரு சிகெரெட்டை எடுத்துப் புகை” என்று கூறினாள்.

252 அதற்கு நானோ, “உனக்கு அவமானம். தேவனுடைய ஊழியக்காரனுக்கு ஒரு சிகெரெட்டு கொடுப்பதென்பது உனக்கு அவமானமே” என்று கூறினேன்.

பின்னும் அவள், “உனக்கு வேண்டுமானால் என்னுடைய புட்டியிலிருந்து சற்று மது அருந்து” என்றாள்.

அதற்கு நான், “தயவு செய்து அதைக் கூறாதே” என்றேன்.

253 அவள் என்னையே உற்றுப்பார்த்தாள். என்னால் அழுவதை அடக்க முடியவில்லை, ஏனென்றால் அவளுடையத் தந்தை ஒரு நல்ல மனிதனாயிருக்கிறார். நான் அவளை நோக்கிப் பார்த்தேன். நானோ, “ஓ, என்னே! அவளுக்கு ஏராளமான நேரம் இருப்பதாக எண்ணிக்கொண்டாளே” என்று நினைத்தேன்.

254 அதன்பின்னர் நான் நடக்கத் துவங்கினேன். என்னுடைய கண்களிலிருந்து கண்ணீர் வழிவதை என்னால் நிறுத்த முடியவில்லை. நான் தொடர்ந்து நடந்தேன். அப்பொழுதும் அவள், “ஒரு நிமிடம் நில்லுங்கள்” என்றாள்.

அதற்கு நானோ, “சொல், என்ன அம்மணி?” என்று கேட்டேன்.

255 அவள் பின்னால் நடந்து வந்தாள். ஜனங்கள் கடந்து சென்றுகொண்டிருந்த அந்த வீதியில் அவளிடத்தில் பேசுவது

ஏறக்குறைய ஒரு அவமானமாயிருந்தது. அவள் நடந்து அருகில் வந்தாள். பின்னர் அவள், "அன்றிரவு நீர் என்னிடத்தில் என்னக் கூறினீர் என்பது உமக்குத் தெரியுமா?" என்று கேட்டாள்.

அதற்கு நானோ, "எனக்கு எப்பொழுதுமே நினைவிருக்கும்" என்றேன்.

256 அப்பொழுது அவள், "பிரசங்கியாரே, நீர் சரியாகக் கூறியிருந்தீர் என்றே நான் உமக்குக் கூற விரும்புகிறேன்" என்றாள். மேலும் அவள், "நான் அப்பொழுது கடைசி முறையாக பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தினேன்" என்றுக் கூறினாள். இப்பொழுது அந்த ஸ்திரீ என்னிடத்தில் கூறின குறிப்பிடத்தக்க குற்றம் இதுதான். நான் அதை உயிரோடிருக்கும் வரை மறக்கவே மாட்டேன். அவள், "அவர் அன்றிரவு என்னோடு ஈடுபட்டுக்கொண்டிருந்தார். ஆனால்" என்று கூறி, "நான் அவரை அந்த நேரத்தில்

புறக்கணித்தபோது, அதுவே என்னுடையக் கடைசி நேரமாயிருந்தது” என்றாள். அவள் தொடர்ந்து, “அது முதற்கொண்டே என்னுடைய இருதயம் மிகவும் கடினமாயிருந்து கொண்டு வருகிறது; நான் தேவனுக்காகவோ, சபைக்காகவோ அல்லது மற்றெந்த காரியத்திற்காகவோ கவலைப்படுகிறதே இல்லை. நான் என்னுடைய தந்தையினிடத்தில் ஒவ்வொரு நாளும் முரட்டாட்டம் பண்ணிக்கொண்டிருக்கிறேன்” என்று கூறினாள். மேலும் அவள், “என் தாயினுடைய ஆத்துமா ஒரு பணியாரத்தைப் போன்று நரகத்தில் வறுத்தெடுக்கப்படுவதையும், அது நகைக்கப்படுவதையும் என்னால் கான முடிகிறது” என்றும் கூறினாள். அதுவே கடைசி முறையாக பரிசுத்த ஆவியை துக்கப்படுத்தினதாகும். அதைக் குறித்து சிந்தித்துப் பாருங்கள்.

257 நாம் ஒரு புறாவின் சிறகுகளில் பரலோக வீட்டிற்குச் செல்வோமாக. நாம் மணவாட்டியாயிருப்போமாக. நீங்கள் தவறாயிருந்தால், இப்பொழுதே உங்களுடைய இருக்கையிலிருந்து எழும்புங்கள். இங்கே மேலே வாருங்கள். இங்கே பீடத்தண்டை நின்று, "நான் தவறாயிருந்து வந்துள்ளேன், சகோதரன் பிரான்ஹாம், நான் எரிச்சலான மனநிலையுடையவனாய் இருந்து வந்திருக்கிறேன். இல்லையென்றால் நான்—நான்—நான் தேவபக்தியற்றவனாய் வாழ்ந்து வந்திருக்கிறேன். நான்—நான் செய்யக் கூடாத இந்தக் காரியங்களை நான் செய்கிறேன். சகோதரன் பிரான்ஹாம், நான் *இதை*, *அதை* அல்லது *மற்றதைச்* செய்திருக்கிறேன். நான் பொய்யுரைத்தலில் குற்றவாளியாய் இருக்கிறேன். நான் திருடுகிறதில் குற்றவாளியாயிருக்கிறேன். நான் வேறேதோ ஒரு காரியத்தில் குற்றவாளியாயிருக்கிறேன். நான் சேவிக்க வேண்டியவிதமாக தேவனை

சேவித்திருக்கவில்லை. நான் என்னைக் குறித்தே வெட்கப்படுகிறேன். நான் என் ஜீவியத்தை சரிப்படுத்திக்கொள்ள விரும்புகிறேன். எனவே சகோதரன் பிரான்ஹாம், நீர் இன்றிரவு இங்கே எனக்காக ஜெபிக்கமாட்டீரா?” என்று கூறுங்கள். நான் அதைச் செய்ய சந்தோஷப்படுவேன்.

258 தேவன் சுகவீனம், குருடு, துயரப்படுகிறவர்களுக்கான என்னுடைய ஜெபங்களைக் கேட்டு பதிலளிப்பாரானால், அப்பொழுது அவர் பாவிக்கான ஒரு ஜெபத்தையும் நிச்சயம் கேட்பார். நீங்கள் மணவாட்டியின் பாகமாயிருக்கும்படிக்கு இன்றிரவே வரமாட்டீர்களா? நீங்கள் வரும்படியாக நான் உங்களை அழைக்கிறேன்.

**62-0121E — ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணம்**

Rev. William Marrion Branham

# ஓ, நான் அவரைக் காண விரும்புகிறேன், நீங்கள் விரும்பவில்லையா?



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள்
பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: 61-0101 — வெளிப்படுத்தின விசேஷம், நான்காம் அதிகாரம் பாகம் II

111 ஒரு நாளில்...சகோதரி கேடில், சகோதரி ஹோவர்ட் கேடில் அவர்களை உங்களில் அநேகருக்கு ஞாபகமிருக்கும் என்று நான் நினைக்கிறேன். அந்த தெருவுக்கப்பால் நான் வசித்து வந்தேன். என் மனைவி அங்கே ஒரு அறையில் உட்கார்ந்திருந்தாள். அவள் அப்பொழுது குளிரால் வாடினாள் என்பது எனக்கு ஞாபகத்திற்கு வருகிறது. நான் எழுந்தேன்; என்னிடம் மங்கி ஸ்டவ் என்னும் ஒரு வகை பழைய அடுப்பு இருந்தது. நாங்கள் அந்த அடுப்பில் எங்களுக்கு ரொட்டியை சுட்டுக்கொண்டிருந்தோம். அப்பொழுது மிகவும் அதிகமாகக் குளிர் அடித்துக் கொண்டிருந்தது, காற்றும் வீசியது. அது குளிர் காலமாயிருந்தது. தரையின் மேல்

பனி படிந்திருந்தது, புகைக்கூண்டையும் அந்த பனிக்காற்று விட்டு வைக்கவில்லை. எனவே, என் ஜீவனை காப்பாற்றிட என்னால் அவ்வடுப்பை எரிய வைக்க முடியவில்லை. நான் ஏறத்தாழ நிலைகுலைந்து போகும் நிலைக்கு ஆளாகிவிட்டேன். நான் பற்ற வைக்க முயன்றால், அதை மீண்டும் காற்று வீசி அணைத்துவிடும். என் மகன் பில்லியும், என் மனைவியும் குளிரினால் வாடினார்கள். நான் ஒரு கணப்பை மூட்ட முயன்று கொண்டிருந்தேன். அப்பொழுது நான் வானொலியைத் திருப்ப நேர்ந்தது, (அப்பொழுது நான் சில நிமிடங்களில் உடல் உஷ்ணமடைந்தேன்) சகோதரி கேடில் அவர்கள் வானொலியில் “தூரத்தில் அத்தேசத்தை, அக்கரையிலுள்ள அத்தேசத்தை நாம் அடையும்பொழுது, நான் இயேசுவைக்

காண விரும்புகிறேன், நீங்கள் விரும்பவில்லையா?" என்ற பாடலைப் பாடிக்கொண்டிருந்தார்கள். ஓ, என்னே!

112 நான் தரையில் நடுவில் உட்கார்ந்து, அழ ஆரம்பித்தேன். அச்சகோதரி தன்னுடைய மிக இனிமையான குரலில், பாடும் பறவையின் இனிய குரலில் எப்படியாய் பாட முடிந்தது என்பதை நீங்கள் அறிவீர்கள். நான் அக்கரைத் தேசத்தில் செல்லும்பொழுது, அச்சகோதரியின் இனிய பாடலைக் கேட்க விரும்புகிறேன். "நான் இயேசுவைக் காண விரும்புகிறேன். நீங்கள் விரும்பவில்லையா?" என்பதே அப்பாடலாகும்.

113 நான், "ஓ தேவனே, ஆம், நான் ஒரு நாளில் அவரைக் காண விரும்புகிறேன், மலர்களெல்லாம் அருகில்

மிதந்து வருகையில் நான் இயேசுவைக் காண விரும்புகிறேன்" என்று எண்ணினேன். அழகாக, பட்டொளி வீசிப்பறந்திடும் அவரை அவரது சிங்காசனத்தின் மேல் பார்ப்பது எப்படியாயிருக்கும்! நான்...ஓ, யோவான் நின்ற இடத்திலே நானும் நிற்கவிரும்புகிறேன். எனவே நானும் நின்று அவரை நோக்கிப் பார்த்திட முடியும்.

**61-0101 — வெளிப்படுத்தின விசேஷம், நான்காம் அதிகாரம் பாகம் II**

Rev. William Marrion Branham

# நீங்கள் அவ்விதம் விசுவாசிக்காவிடில், நீங்கள் கொண்டிருக்கும் விசுவாசத்தில் ஏதோ தவறுண்டு



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: மூன்றாம் முத்திரை, மார்ச் 26, 1963 மாலை

71. எடுக்கப்படுதலில் ஒருவன் மாத்திரம் செல்வானேயாகில், அது நானாயிருக்க வேண்டும். ஆமென், பாருங்கள். ஏனெனில் நான் அவர் மீது விசுவாசம் கொண்டிருக்கிறேன் "அது நான்தான்''. இவ்விதமே நீங்கள் அதை விசுவாசிக்க வேண்டும். நிச்சயமாக.

'நான் அவரிடம் நெருங்கி ஜீவிக்க விரும்புகிறேன் அப்படியானால் அவர் வரும்போது என்னைக் கொண்டு செல்வா ரென்று நான் அறிந்திருக்கிறேன். நான் அதை விசுவாசிக்கிறேன். அது உண்மை. மற்றவர் அதில் செல்லத்தவறினாலும், அவருடைய கிருபையால் நான் அங்கிருப் பேன். ஏனெனில் அவர் எனக்கு அவ்விதம்

வாக்களித்துள்ளார். நான் அங்கிருப்பேன் என்று அறிந்திருக்கிறேன். அவர் ஒருபோதும் பொய்யுரையார். நான் தினந் தோறும் அவர் இன்று வருவாரென்று கருதி அவருக்குகந்த விதத்தில் ஜீவிக்கிறேன் என்பதை என் ஆத்துமாவும் ஜீவனும் சாட்சி கொடுக்கின்றன. ஆகவே எடுக்கப் படுதலில் நான் நிச்சயமாக இருப்பேன். எட்டு பேர் எடுக்கப்பட்டால், நான் எட்டுப் பேரில் ஒருவனாயிருப்பேன். ஐந்நூறு பேர் எடுக்கப்பட்டால் நான் ஐந்நூறு பேரில் ஒருவனாக இருப்பேன்' என்று நீங்கள் விசுவாசிக்கவேண்டும். மற்ற நபரைப் பற்றி நான் அறியேன், ஆனால் நான் அந்த ஐந்நூறு பேரில் ஒருவனாக இருக்க விரும்புகிறேன்,'' பாருங்கள்? நீங்கள் அவ்விதம்தான் ஞாபகங்கொள்ள வேண்டி யவராய் இருக்கிறீர்கள். பாருங்கள்?

72. நீங்கள் அவ்விதம் விசுவாசிக்கா விடில், நீங்கள் கொண்டிருக்கும் விசுவா

சத்தில் ஏதோ தவறுண்டு. பாருங்கள்? அவ்வாறாயின் இரட்சிக்கப்பட்டதன் நிச்சயம் உங்களுக்கு ஏற்படவில்லை. இரட்சிக்கப்பட்டதாக நீங்கள் ஊகித்துக் கொள்கின்றீர்கள். அவ்விதம் செய்ய வேண்டாம். சரி.

~~~~~~~~~~~

# மூன்றாம் முத்திரை

(THE THIRD SEAL)

**மார்ச் 26, 1963 மாலை**


~~~~~~~~~~~

# தேவனுக்கு முன்பாக மனந்திரும்புதல் அவருடைய கோபத்தை நிறுத்துகிறது

செய்தி: **63-07-24 தேவன் ஒரு மனிதனை முதலில் எச்சரிக்காமல் அவனை நியாயத் தீர்ப்புக்குள் கொண்டு வருவதில்லை**

**சகோ.வில்லியம் பிரன்ஹாம்**



**நீங்கள் எப்பொழுதுமே தேவனுடைய ராஜ்யம் எங்குள்ளதோ, தேவனுடைய மகிமை எங்கு ஊற்றப்படுகிறதோ, அங்கு தங்கியிருக்க வேண்டும், ஆவிக்குரிய விதமாக நீங்கள் இரவும் பகலும் போஷிக்கப்படக்கூடிய இடத்தில் தங்கியிருங்கள்.**

செய்தி: **வேறொருவரால் விளையும் பாதிப்பு,** 13.10.1962

சகோ.வில்லியம் பிரன்ஹாம்



# கழுகின் சத்தம்

அக்டோபர் 28, 2023

1

